SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் கார்த்திகை 11 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 ஜமாதுல் அவ்வல் 23

மாநிலம் பயனுற!

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:-
98423 35007

● புதுச்சேரி ● செவ்வாய்க்கிழமை, நவம்பர் 26, 2024 ● வெளியூர்: 27-11-2024, புதன்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 139 ● 6 பக்கம் ● ரூ.6

## ஒடிசாவில் 29ம் தேதி டி.ஜி.பி.க்கள் மாநாடு: பிரதமர் மோடி பங்கேற்பு



**புவனேஸ்வரம், நவ. 26-**

ஒடிசா மாநிலம் புவனேஸ்வரத்தில் அனைத்து மாநில போலீஸ் டி.ஜி.பி.க்கள் மாநாடு வருகிற 29 ந்தேதி தொடங்குகிறது. டிசம்பர் 1ந்தேதி வரை 3 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். இந்த மாநாட்டில் உள்துறை மந்திரி அமித்ஷா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச போலீஸ் டி.ஜி.பி.க்கள், ரா உள்ளிட்ட மத்திய உளவுத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட முக்கிய உயர் அதிகாரிகள் இந்த மாநாட்டில் பங்கேற்கிறார்கள்.

இதுபற்றி ஒடிசா மாநில டி.ஜி.பி. ஒய்.பி.குரானியா கூறுகையில், 3 நாள் மாநாட்டையொட்டி ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டு, 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. புவனேஸ்வரம் முழுவதும் போலீசாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்றார். கடந்த 2013 வரையில் இந்த மாநாடு டெல்லியில் மட்டும் நடைபெற்று வந்தது. 2014 முதல் பல்வேறு மாநிலங்களில் நடத்தப்பட்டு பாதுகாப்பு சவால்கள் குறித்து விவாதிக்கப்பட்டு வருகிறது.

## அமைச்சர் கே.என்.நேரு மருத்துவமனையில் அனுமதி



**சென்னை, நவ. 26-**

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரும், தி.மு.க. முதன்மை செயலாளருமான கே.என்.நேரு காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.காய்ச்சல், உடல் சோர்வு உள்ளிட்ட பிரச்னைகள் அவருக்கு இருந்ததால் சென்னை ஆயிரம் விளக்கு அப்பல்லோ மருத்துவமனையில் அவருக்கு அதற்கான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அமைச்சர் கே.என்.நேரு எடுத்து வந்த நிலையில், அவருக்கு உடல் சோர்வு ஏற்பட்டு காய்ச்சலுக்கான அறிகுறி இருந்ததாக கூறப்படுகிறது. அதன் காரணமாக மருத்துவமனைக்கு சென்ற அமைச்சர் கே.என்.நேரு, சிகிச்சை முடிந்து தன்னுடைய வழக்கமான பணிகளுக்கு திரும்புவார் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

## பொங்கலன்று அறிவிக்கப்பட்ட சி.ஏ. தேர்வு தேதி மாற்றம்

**புதுடெல்லி, நவ. 26-**

இந்தியா முழுவதும் சி.ஏ. (சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட்) எனப்படும் பட்டய கணக்காளர் தேர்வு அடுத்த ஆண்டு (2025) ஜனவரி 12, 14, 16, 18 ஆகிய தேதிகளில் நடைபெறும் என இந்த தேர்வை நடத்தும் சார்ட்டர்ட் அக்கவுன்டன்ஸ் ஆப் இந்தியா (அய்.சி.ஏ.அய்.) என்ற நிறுவனம் அறிவித்துள்ளது.

ஜனவரி 14ம் தேதியன்று தமிழ்நாட்டில் பொங்கல் விழா கொண்டாடப்படும் வேளையில், சி.ஏ. தேர்வை நடத்துவது, இந்த தேர்வை எதிர்கொள்ள இருக்கும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு பெரும் சிரமத்தை ஏற்படுத்தும் என்று பல்வேறு அரசியல் கட்சியினர், அமைப்புகள் கண்டனம் தெரிவித்திருந்தன.

இதன்படி பொங்கல் பண்டிகை அன்று சி.ஏ. தேர்வுகளை மத்திய அரசு அறிவித்ததற்கு, மார்க்சிஸ்ட் எம்.பி. சு.வெங்கடேசன் உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்திருந்தனர். இந்நிலையில், இதற்கு பதிலளித்த மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், இதிலும் மொழி பிரச்சினையை எதிர்க்கட்சிகள் பிரச்சாரமாக கொண்டு வருகின்றனர் என்றும் தேர்வு ஆணையத்தின் முடிவுகளில் மத்திய அரசு தலையிடுவதில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் தொடர்ந்து எதிர்ப்புகள் வலுத்து வந்த நிலையில், ஜனவரி மாதம் 14ம் தேதி நடைபெறவிருந்த சி.ஏ. தேர்வு, ஜனவரி 16ம் தேதி அன்று நடைபெறும் என்று இந்திய பட்டயக் கணக்காளர் நிறுவனம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

### அதி கனமழை எச்சரிக்கை

# டெல்டா மாவட்டங்களை நோக்கி நகரும் காற்றழுத்த தாழ்வு மண்டலம்

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்

**சென்னை, நவ. 26-**

வடகிழக்கு பருவமழை காரணமாக தமிழகத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக, தென் மாவட்டங்கள், தென் கடலோர மாவட்டங்களில் கனமழை பெய்து வந்தது. இந்த சூழலில், தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் கடந்த 22ந்தேதி புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி ஒன்று உருவானது. இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, காற்றழுத்ததாழ்வு மண்டலமாக வலுபெற்றது.

இந்நிலையில் வங்கக் கடலில் நிலைக்கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் டெல்டா மாவட்டங்களை நோக்கி மெதுவாக நகர்ந்து வருவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி சென்னையில் இருந்து 830 கி.மீ. தொலைவிலும், நாகையில் இருந்து 630 கி.மீ. தொலைவிலும் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நிலை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 10 கி.மீ. வேகத்தில் வடமேற்கு திசையில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நகர்ந்து வருகிறது என்றும், அடுத்த 12 மணி நேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக, இன்று டெல்டா மாவட்டங்கள், காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் அதிகனமழையும், ஒரு சில இடங்களில் கனமழை முதல் மிக கனமழையும் பெய்யும். இதன்படி கடலூர், மயிலாடுதுறை மாவட்டங்கள், காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் அதிகனமழையும், ஒரு சில இடங்களில் கன மழை முதல் மிக கனமழையும் பெய்ய வாய்ப்புகள் உள்ளது. அதிகனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் வழங்கப்பட்டு உள்ளது.

அதேநேரம், இன்று விழுப்புரம், கடலூர், அரியலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்கள், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கனமழை முதல் மிக கனமழைக்கு வாய்ப்பு இருக்கிறது. ராமநாதபுரம், திருச்சி, பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை அரியலூர், திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, விழுப்புரம் மாவட்டங்கள், புதுச்சேரியில் ஓரிரு இடங்களில் கன மழை முதல் மிக கனமழையும், ராமநாதபுரம், சிவகங்கை, திருச்சி, பெரம்பலூர், கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் வளைகுடா, குமரிக்கடல், தமிழக கடற்கரை பகுதிகள், மத்திய மேற்கு மற்றும் தெற்கு வங்கக்கடல் பகுதிகளுக்கு அடுத்து வரும் 5 நாட்களுக்கு மீனவர்கள் செல்லவேண்டாம் என்றும் ஆழ்கடலில் இருக்கும் மீனவர்கள் கரைக்கு திரும்பிட என அறிவுறுத்தப்படுகிறார்கள் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.





பிறவாமை அருளும் அகத்தியரின்
ஆத்ம காயத்ரி மந்திரம்
ஓம் அகத்து ஈசாய வித்மஹே
கால ஹஸ்தாய தீமஹி
தந்நோ சர்வப் ப்ரசோதயாத்.
பொருள்: எனது ஆன்மாவே,நீபரமாத்மாவினை சென்றடைய வேண்டிய காலம் உதித்துள்ளது நீ விழிப்படைவாயாக...
தினமும் காலையும் மாலையும் குறைந்தது 27 முதல் 108 முறை 48 நாட்கள் உரைத்தால் கீழ்கண்ட பலன்கள் கிட்டும்..
உங்கள் வேண்டுதல் நிறைவேறும்
1) நோய்கள் குணமாகும் (மௌனமாக உரைத்தால்)
2) பிறவாமை நிலை சித்திக்கும் / கர்மவினைகள் கரையும் (ஓசையுடன் உரைத்தால்)
3) கணவன் மனைவி ஒற்றுமை குடும்ப அமைதி கிடைக்கும் (குடும்பத்தில் அனைவரும் சேர்ந்து உரைத்தால்)
4) உங்கள் உயிருக்கு உணவாகிறது; பிரபஞ்ச ஆற்றல் ஈர்க்கப்படும்.
பிரளய அழிவுகளிலிருந்து காக்கப்படுவீர்
9789032199 7996774757
www.anbaalayam.com

## கேரளா: சாலையோரம் தூங்கிக்கொண்டிருந்தவர்கள் மீது லாரி ஏறி விபத்து-5 தமிழர்கள் பலி



**திருச்சூர், நவ. 26-**

கேரள மாநிலம் திருச்சூர் அருகே உள்ள நாட்டிகை பகுதியில் நெடுஞ்சாலைசாலை பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் காரணமாக அவ்வழியாக வரும் வகனங்கள் மாற்றுபாதையில் திருப்பிவிடப்பட்டுள்ளன. சாலைப்பணி நடைபெறும் பகுதியில் தடுப்புகள் அமைக்கப்பட்டு இருந்தன.

இந்த நிலையில், சாலையோரத்தில் தடுப்புகள் அமைக்கப்பட்டு இருந்த பகுதியில் தமிழகத்தை சேர்ந்த 10க்கும் மேற்பட்டோர் உறங்கிக்கொண்டிருந்தனர். அப்போது மரக்கட்டைகளை ஏற்றிக்கொண்டு வந்துகொண்டிருந்த லாரி, தடுப்புகளை உடைத்துக்கொண்டு உறங்கிக்கொண்டிருந்தவர்கள் மீது ஏறி விபத்தை ஏற்படுத்தியது.

இந்த கோர விபத்தில் 2 குழந்தைகள் உட்பட 5 தமிழர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும் 7 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு திருச்சூரில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதிகாலையில் இந்த சம்பவம் நடைபெற்றதாக கூறப்படுகிறது.

விபத்தை ஏற்படுத்திய லாரி ஓட்டுநர் மற்றும் உதவியாளரை போலீசார் கைதுசெய்துள்ளனர். போலீசார் நடத்திய முதற்கட்ட விசாரணையில், லாரி ஓட்டுநர் குடிபோதையில் லாரியை இயக்கியது தெரியவந்துள்ளது. மேலும் விசாரணை நடைபெற்று வருகிறது.

# தமிழ்நாடு அரசின் சாதனைகள் புகைப்பட கண்காட்சி



கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் பேரூராட்சி அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்து பொது மக்கள் அறிந்து கொண்டு பயன்பெறும் வகையில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் புகைப்படக் கண் காட்சி நடைபெற்றது.

# பாலியல் வன்முறைக்கெதிரான பிரச்சார விழிப்புணர்வு பேரணி






திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் தேசிய அளவிலான பாலியல் வன்முறைக்கெதிரான பிரச்சார விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்து, கையெழுத்து இயக்கத்தை துவக்கி வைத்தார்கள்.

# புதுச்சேரி வக்ஃப் வாரியத்திற்கு உடனே தலைவரை நியமிக்க வேண்டும்

## தமுமுக, மமக கூட்டத்தில் தீர்மானம்

**காரைக்கால், நவ. 26-**

புதுச்சேரி வக்ஃப் வாரியத்திற்கு உடனே தலைவரை நியமிக்க வேண்டும். என, காரைக்கால் மாவட்ட தமுமுக மற்றும் மமக செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காரைக்கால் மாவட்ட தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் மற்றும் மனிதநேய மக்கள் கட்சியின் செயல்வீரர்கள் கூட்டம், காரைக்கால் கைலாசநாதர் கோவில் வீதியில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மமக துணை பொது செயலாளர் தஞ்சை பாதுஷா, தமுமுக தலைமை பிரதிநிதி அலாவுதீன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.

கூட்டத்தில், தமுமுக, மமக மாவட்ட தலைவராக அப்துல் ரஹீம், தமுமுக மாவட்ட செயலாளராக வி.முஹம்மது மாசிம், மமக மாவட்ட செயலாளராக வி.முஹம்மது சர்புதீன், தமுமுக, மமக மாவட்ட பொருளாளராக கி.முஹம்மது மெய்தீன் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தின் முடிவில், நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விபரம் வருமாறு: வக்பு சொத்துக்களை பாதுகாக்கவும், கல்விக்கூடங்கள் மற்றும் பள்ளிவாசல்களை பராமரிக்கவும் உடனடியாக வக்பு வாரிய தலைவரை நியமித்து வக்பு நிர்வாகத்தை காப்பாற்ற வேண்டும். முமுகவின் நீண்ட நெடிய போராட்டத்திற்கு பின் பெறப்பட்ட முஸ்லிம்களுக்கான கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் முஸ்லிம்களுக்கான இரண்டு சதவிகித தனி இட ஒதுக்கீடு புதுச்சேரி மாநிலத்தில் முறையாக வழங்கப்பட்டு வருகிறதா என்பதை வெள்ளை அறிக்கையாக வெளியிடவும், அந்த இரண்டு சதவீத இட ஒதுக்கீட்டில் விளையாட்டு பிரிவு ஒதுக்கீட் டிற்கு தனியாக ஒதுக்கக்கூடாது.

காரைக்கால் மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் சாலைகளில் திரியும் மாடுகள், நாய்களால் ஏராளமான விபத்துகள் ஏற்படுவதால், காரைக்காலில் உள்ள 6 உள்ளாட்சி அமைப்புகளுக்கும் என தனியாக மாடுகளைப் பிடிக்க ஒரு வாகனத்தை வாங்க வேண்டும் எனவும், அந்த வாகனத்தில் மாடுகளை பிடிக்க தனியாக ஆட்களை நியமிக்கவும், பிடிக்கப்படும் மாடுகளை தனியாக பட்டியை ஏற்படுத்தி அதில் அவைகளை பராமரிக்கவும், அப்படி பிடிக்கப்படும் மாடுகளுக்கு அதிகபட்ச தொகையாக அபராதம் விதிக்கவும், மேலும் சாலைகளில் மாடுகளை திரியவிடும் உரிமையாளர்கள் மீது வழக்கு பதிவு செய்யவும், விபத்துக்கள் மூலம் உயிரிழப்பு மற்றும் உடல் சேதம் ஏற்பட்டுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும்.

காரைக்கால் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் சுய உதவி குழுக்கள் மூலம் பெண்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் அதிக வட்டி வசூல் செய்வதால், மாவட்ட ஆட்சியர் இவ்விஷயத்தில் தலையிட்டு அதிக வட்டி வசூல் செய்யும் நபர்கள் மீது கடுமையான நடவடி க்கை எடுக்க வேண்டும். மக்களை வாட்டி வதைக்கும் வகையில் உள்ள அதிகப்படியான மின் வரி மற்றும் சேவை வரியை ரத்து செய்ய வேண்டும். காரைக்கால் பேரளம் புதிய ரயில் பாதை அமைக்கும் பணிக்காக காரைக்காலின் முக்கிய சாலைகளில் ரயில்வே கிராசிங் பணியை விரைந்து முடிக்கவேண்டும்.

காரைக்காலில் இருந்து விடப்பட்ட திருச்சி –காரைக்கால் ரயில்களை மீண்டும் இயக்கவும், திருவனந்தபுரம் திருச்சி, ஈரோடு திருச்சி ரயில்களை காரைக்கால் வரை நீட்டிக்கவும், ஏற்கனவே ஓட்டப்பட்டு வந்த கொல்லம் நாகூர் ரயிலை மீண்டும் இயக்கவும் ஒன்றிய அரசு, ரயில்வே துறை, புதுச்சேரி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியா முழுவதும் உள்ள அனைத்து வழிபாட்டு தளங்களை பாதுகாத்திட கோரியும் வரும் டிசம்பர்'6 அன்று தஞ்சை மண்டலம் திருவாரூரில் நடைபெறவுள்ள பெருந்திரல் மக்கள் போராட்டத்தில் காரைக்காலிலிருந்து 100க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்வது என முடிவு செய்யப்பட்டது. உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாவட்ட தலைவர் அப்துல் ரஹீம் நன்றி கூறினார்.

## தலையங்கம்

# மாலை எக்ஸ்பிரஸ்

26.11.2024 (செவ்வாய்க்கிழமை)

# நாடாளுமன்றத்தில் ஒலிக்கப்போகும் பிரியங்கா குரல்

காங்கிரஸ் கட்சியை பொறுத்தவரை, நேருவின் குடும்பத்தினர் வழி வழியாக முக்கிய பொறுப்புகளை வகித்து வருகிறார்கள். நேருவின் தந்தை மோதிலால் நேரு 1919–1920, 1928–1929 ஆகிய ஆண்டுகளில் அகில இந்திய காங்கிரஸ் தலைவராக புகழ் பெற்று விளங்கினார். அதன்பிறகு, ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி, சஞ்சய் காந்தி, ராஜீவ்காந்தி, சோனியாகாந்தி, ராகுல்காந்தி என்று எல்லோருமே காங்கிரசில் தலைவர்களாக இருந்த நேரத்தில், ராகுல் காந்தியின் தங்கையான பிரியங்கா மட்டும் தீவிர அரசியலில் ஈடுபடாமல் குடும்பத் தலைவியாகவே இருந்து வந்தார்.

முதலில், தாயார் சோனியாகாந்தி, சகோதரர் ராகுல்காந்திக்கு தேர்தல் பணியாற்றிய அவர், 2019 ம் ஆண்டுதான் தீவிர அரசியலில் நுழைந்தார். அதே ஆண்டு ஜனவரி மாதம் 23ந்தேதி, காங்கிரஸ் கட்சியின் உத்தரபிரதேச மாநில கிழக்குப் பகுதி பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார். 2020ம் ஆண்டு செப்டம்பர் 11ந்தேதி அம்மாநிலம் முழுமைக்கும் கட்சியின் பொதுச் செயலாளரானார். அங்கிருந்து அவரது அரசியல் பயணமும் தொடங்கியது. அவரது மேடைப் பேச்சு கட்சியினர் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. 52 வயதான பிரியங்கா பேச்சில் மட்டுமல்லாமல், நடை, உடை, பாவனை அனைத்திலும் பாட்டி இந்திரா காந்தியையே அனைவருக்கும் நினைவுபடுத்தினார்.

இந்த நிலையில், நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் அவருடைய சகோதரர் ராகுல்காந்தி 2வது முறையாக கேரள மாநிலம் வயநாடு தொகுதியிலும், உத்தரபிரதேச மாநிலம் ரேபரேலி தொகுதியிலும் போட்டியிட்டு, இரண்டிலும் வெற்றி பெற்றதால், வயநாடு தொகுதி எம்.பி. பதவியை அவர் ராஜினாமா செய்தார். அந்த தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டு, காங்கிரஸ் வேட்பாளராக பிரியங்கா நிறுத்தப்பட்டார். வயநாடு நிலச்சரிவின்போதே பாதிக்கப்பட்ட பகுதிக்கு அவர் நேரடியாக சென்று மக்களை சந்தித்து ஆறுதல் கூறியது, அந்தத் தொகுதியில் அவருக்கு மிகுந்த செல்வாக்கை ஏற்படுத்தியது. வயநாடு தொகுதி வாக்காளர்களில் 41 சதவீதம் பேர் முஸ்லிம்கள், 13 சதவீதம் பேர் கிறிஸ்தவர்கள் என்ற நிலையில், அவர் வெற்றி பெறுவது உறுதி என்று முன்கூட்டியே கணிக்கப்பட்டது. ஆனால், ராகுல்காந்தியைவிட அதிக வாக்கு பெறுவாரா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டது.

வயநாடு தொகுதியில் ராகுல்காந்தி போட்டியிட்டபோது 72.92 சதவீத வாக்குகள் பதிவான நிலையில், இப்போது 9 சதவீதம் குறைந்து, அதாவது 64.72 சதவீத வாக்குகளே பதிவாகி இருந்தன. என்றாலும், பிரியங்கா 4 லட்சத்து 10 ஆயிரத்து 931 வாக்குகள் வித்தியாசத்தில் அமோக வெற்றி பெற்றார். இது ராகுல்காந்தி பெற்ற வாக்கு வித்தியாசத்தைவிட 46 ஆயிரத்து 509 அதிகமாகும். இனி வயநாடு தொகுதி மக்களுக்கு மட்டுமல்லாமல், நாட்டு மக்களுக்காகவும் பிரியங்காவின் குரல் நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலிக்கப்போகிறது.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# கனமழையால் பாதிப்பு உதவிக்கு 112,1077 எண்களில் புகார் தெரிவிக்கலாம்

## கலெக்டர் குலோத்துங்கன் தகவல்

**புதுச்சேரி, நவ. 26-**

காற்றழுத்த தாழ்வு நிலையையொட்டி, கனமழையை எதிர் கொள்ள, பொதுமக்கள் உதவிக்காக பேரிடர் மேலாண்மை துறையில் உள்ள 112 மற்றும் 1077 எண்களில் புகார் தெரிவிக்கலாம்.

இதுகுறித்து, கலெக்டர் குலோத்துங்கன் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது, வங்க கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக புதுச்சேரியில் வரும் 29ம் தேதி வரை கனமழை பெய்யக்கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அதை எதிர்கொள்ள மேலாண்மைத்துறையில், 112 மற்றும் 1077 ஆகிய உதவி எண்கள் மூலம் தொடர்பு கொண்டு பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம். குறுந்தகவல் புகார்களை மட்டும் வாட்ஸ்அப் 9488981070 எண்ணை பயன்படுத்திக்கொள்ளலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மாநகராட்சி பணியாளர்களுக்கு கண் பரிசோதனை முகாம்



**மதுரை, நவ. 26-**

மதுரை மாநகராட்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளினை முன்னிட்டு மேக்ஸிவிஷன் கண் மருத்துவமனை சார்பில் நடத்தப்பட்ட மாநகராட்சி பணியாளர்களுக்கு கண் பரிசோதனை முகாமினை மேயர் இந்திராணி பொன்வசந்த் தொடங்கி வைத்தார்.

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளினை முன்னிட்டு மேக்ஸிவிஷன் கண் மருத்துவமனை சார்பில் நடத்தப்பட்ட மாநகராட்சி பணியாளர்களுக்கு இலவச கண் பரிசோதனை முகாமினை மேயர் இந்திராணி பொன் வசந்த் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளினை முன்னிட்டு மதுரை மேக்ஸிவிஷன் கண் மருத்துமவனை சார்பில் மாநகராட்சி பணியாளர்களுக்கு சிறப்பு கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இம்முகாமில் கண் பார்வை பரிசோதனை, கண்நீர் அழுத்தம், கண் புரை பரிசோதனைகள் மற்றும் ரத்த அழுத்தம், சர்க்கரை பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. கண்பார்வை குறைபாடுகள் உள்ளவர்களுக்கு இலவசமாக கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டு, கண் புரை நோய் உள்ளவர்களுக்கு மேல் சிகிச்சைக்காக மேக்ஸிவிஷன் கண் மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்பட்டது. இம்முகாமில் சுமார் 175 தூய்மை பணியாளர்கள், 75 அலுவலக பணியாளர்களுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. கண் மருத்துவமனையை சார்ந்த சுமார் 15 மருத்துவர்கள், செவிலியர்கள், அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் நகர்நல அலுவலர் இந்திரா, உதவி நகர்நல அலுவலர் அபிஷேக், மக்கள் தொடர்பு அலுவலர் மகேஸ்வரன், மேக்ஸிவிஷன் கண் மருத்துவமனை தலைமை மருத்துவர் ரத்தினா, தலைமை மேலாளர்கள் ஜெயபால், பாலமுருகன், விற்பனை மேலாளர்கள் சிவகுமார், அருள்விக்னேஷ், சுகாதார ஆய்வாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# IPL Auction: Meet Delhi's Priyansh Arya, six-hitting machine who went to Punjab Kings for Rs 3.80 crore

**New Delhi, Nov. 26-**

Sanjay Bharadwaj recollects how he had to change his coaching style for Priyansh Arya, who was obsessed with hitting sixes from a very young age. Bharadwaj, who has coached the likes of Gautam Gambhir, Amit Mishra, Joginder Sharma and Unmukt Chand, calls him a product of the T20 era.

"All my life, I have told my students to play in the V, and If I remember correctly when it came to Priyansh, I never stopped him from playing the aerial shots. Initially, I did give him dressing down but I realised that's his strength and I gave him complete freedom, and he never looked back," Bharadwaj tells The Indian Express.

On Monday, the 23-year-old from Delhi, who is fresh from hitting a 43-ball 102 against Uttar Pradesh in the Syed Mushtaq Ali Trophy, bagged a Rs 3.80 crore contract by the Punjab Kings on the second day of the IPL mega auction in Jeddah, Saudi Arabia.

"After the auction, when he called me I told him that they have given you Rs 3.80 crore, you give them back Rs 30 crore with your performances," Bharadwaj adds.

Arya, who was the top-scorer for Delhi in last year's Syed Mushtaq Ali Trophy with 222 runs at the strike rate of 166.91, grabbed eyeballs in the inaugural Delhi Premier League. Playing for South Delhi Superstarz, Arya slammed 608 runs in 10 innings with a whopping strike rate of 198.69, with two centuries and four fifty-plus total.





"In the DPL he also hit six sixes in one match. Sometimes when you see such talent, you have to give them freedom. He will frustrate you but he will win you matches," says Bharadwaj.

Bharadwaj took Priyansh under his wings when he was 7 years old.

"Sanjay sir is like a god to us. From the time when he joined his academy. At 6 in the morning, Sanjay sir will pick him up from the house and then in the evening drop him off as well. It continued for eight years," says Priyansh's father Pawan Arya, who is a school teacher at Delhi's Government Sarvodaya Vidyalaya, Lancer Road near Vishwavidyalaya metro station.

Growing up in Ashok Vihar New Delhi, Priyansh got all the freedom when it came to cricket but his parents, both teachers by profession, made sure that he did well in his studies also.

"He was seven when he said, he wants to play cricket. I was fine with that but since I am a school teacher and my wife (Radha Bala Arya) is also a school teacher, we made sure that he gets good education," says Pawan.

Pawan has no idea how many sixes his son has scored in the last match, but he remembers his son's marks by heart.

"He has completed BA from Swami Shraddhanand College and scored 67% in the under graduation. It was all his hard work. Now he is pursuing post-graduation from Delhi University," he says.

Priyansh had already made a promise. "Last year only, he told me 'Papa is saal IPL contract aa gaya toh aap aur mummy retirement le lena (If I will get the IPL contract this year, you guys should take early retirement)," laughs Pawan.

However, despite giving trials at 6-7 academies, Priyansh had failed to get an IPL contract until now. "He was disappointed like any young kid," recalls Bharadwaj. "I played with his ego and told him, you are not consistent enough. If you will perform one in five matches, no one will pick you. Something snapped inside him and I saw that in the DPL, with scouts watching, he went berserk. And then after hitting a century in one of the matches, he told me 'Sir, ab toh lenge (now they will pick me)."

Apart from hitting sixes, Priyansh was also very fond of current Team India coach Gautam Gambhir.

"When I was a kid, I used to watch GG sir training in our academy. I never spoke to him, only when I came to the Ranji Trophy camp. Growing up, he was my idol," Arya had told reporters on the sidelines of a DPL match, earlier this year.

# மகளிர் பட்டமளிப்பு விழா அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பங்கேற்பு



**புதுச்சேரி, நவ. 26–**

ஐ.டி.ஐ., மாணவிகளுக்கு அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பட்டங்களை வழங்கினார். உப்பளம் தொகுதிக்குட்பட்ட வம்பாகீரப் பாளையம் அரசு மகளிர் ஐ.டி.ஐ., நிறுவனத்தில் 2023ம் ஆண்டு தேர்ச்சி பெற்ற மாணவிகளுக்கு நேற்று பட்டமளிப்பு விழா நடந்தது.

இதில் அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., சிறப்புரையாற்றி மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார். நிகழ்ச்சியில் ஐ.டி.ஐ., முதல்வர் வசுந்தரா, சண்முகம், விஜயா, சக்திவேல், மணிமாறன், நோயல் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# ஒருங்கிணைந்த சட்டசபை வளாகம் கட்ட சிறப்பு நிதி கேட்டு மத்திய நிதியமைச்சரிடம் சபாநாயகர் செல்வம் மனு

**புதுச்சேரி, நவ. 26–**

புதுச்சேரியில் ஒருங்கிணைந்த சட்டசபை வளாகம் கட்டுவதற்கு, மத்திய அரசின் சிறப்பு மானிய நிதியை கேட்டு மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம், சபாநாயகர் செல்வம் மனு அளித்தார்.

புதுச்சேரியில் தலைமை செயலகத்துடன் கூடிய ஒருங்கிணைந்த சட்டசபை வளாகம் மத்திய அரசின் சிறப்பு நிதி உதவியுடன் கட்ட முதலமைச்சர் ஒப்புதலோடு, சபாநாயகர் செல்வம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். அதன் தொடர்ச்சியாக மத்திய அரசு கேட்டுக் கொண்டதன்படி தலைமை செயலகத்துடன் கூடிய சட்டசபை கட்டுவதற்கான



விரிவான திட்ட அறிக்கை தயாரித்து, சிறப்பு நிதி உதவி கோரி மத்திய அரசுக்கு சமர்ப் பிக்கப்பட்டது.

அதனையேற்று மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த 7.12.2021 மற்றும் 4.3.2022 தேதிகளில் செலவு மதிப்பீடு மற்றும் தொழில்நுட்ப அம்சங்கள் குறித்து விளக்கம் கோரியது. அதற்கு கடந்த 19ம் தேதி புதுச்சேரி அரசு, மத்திய உள்துறை அமைச்சகத்திற்கு விரிவான பதில் கடிதம் அளித்து, ரூ. 600.37 கோடி சிறப்பு மானியத் தொகையாக கோரப் பட்டுள்ளது.

அதனையொட்டி, முதலமைச்சர் ஒப்புதலோடு நேற்று டெல்லி சென்ற சபாநாயகர் செல்வம், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து, புதுச்சேரியில் ஒருங்கிணைந்த சட்டசபை வளாகம் கட்டுவதற்கு மத்திய அரசின் சிறப்பு மானிய நிதியை வரும் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்ய வேண்டிய கடிதம் அளித்து, நிதியை விரைந்து வழங்க கேட்டுக் கொண்டார்.

மேலும், புதுச்சேரியை ஆளுகின்ற தேசிய ஜனநாயக கூட்டணியின் குறிப்பிடத்தக்க சாதனையாக இருக்கும் என்றும், இந்த மதிப்பு மிக்க திட்டத்தை செயல் படுத்துவதில் புதுச்சேரி அரசு ஆர்வமாக உள்ளது எனவும் சபாநாயகர் செல்வம் மத்திய நிதி அமைச்சரிடம் தெரிவித்து, போதுமான நிதியை விரைவில் வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

# முதல்வர் வருகையையொட்டி வழுதரெட்டியில் விழா மேடை அமைக்கும் பணியை அமைச்சர் ஆய்வு

**விழுப்புரம், நவ. 26–**

தமிழ்நாடு முதலமைச்சர் விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகைபுரிந்து அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதையொட்டி வழுதரெட்டியில் அரசு நிகழ்ச்சிக்கான விழா மேடை அமைக்கும் பணி மற்றும் எல்லீஸ் அணைக் கட்டு மறுகட்டுமானம் திறப்பு விழா முன்னேற்பாடு பணிகளை வனத்துறை அமைச்சர் பொன்முடி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



விழுப்புரம் மாவட்டத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் வருகைபுரிந்து அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதையொட்டி வழுதரெட்டியில் அரசு நிகழ்ச்சிக்கான விழா மேடை அமைக்கும் பணிமற்றும்திருவெண்ணெய் நல்லூர் ஊராட்சி ஒன்றியம் ஏனாதிமங்கலம் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள எல்லீஸ் அணைக்கட்டு மறுகட்டுமானம் திறப்பு விழா முன்னேற்பாடு பணிகளை வனத்துறை அமைச்சர் பொன்முடி மாவட்ட ஆட்சித்தலைவர் பழனி தலைமையில் விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் லட்சுமணன், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வனத்துறை அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் விழுப்புரம் மாவட்டத்திற்கு புரிந்து 28.11.2024 மற்றும் 29.11.2024 ஆகிய தேதிகளில் அரசு நிகழ்ச்சிகளான எல்லீஸ் அணைக்கட்டு முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி நினைவு அரங்கம், இட ஒதுக்கீடு போராட்டத்தில் துப்பாக்கிச் சூட்டில் உயிர்நீத்த 21 சமூக நீதி போராளிகளின் தியாகத்தினை போற்றும் மணிமண்டபம் திறப்பு விழா மற்றும் பல்வேறு துறைகள் சார்பாக அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்கள்.

அதனடிப்படையில் இன்றைய தினம் வழுதரெட்டியில் அரசு நிகழ்ச்சிக்கான விழா மேடை அமைக்கும் பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது தமிழ்நாடு முதலமைச்சர் செல்லும் வழித்தட வசதி, முக்கிய பிரமுகர்கள், பயனாளிகள் மற்றும் செய்தியாளர்கள் ஆகியோருக்கான இருக்கை வசதிகள் அமைவிடம், அடிப்படை வசதிகளான குடிநீர் தொட்டி ஜெனரேட்டர் வசதி தற்காலிக

கழிவறை வசதி, தற்காலிக மருத்துவ முகாம் அமைக்கும் இடம் ஆம்புலன்ஸ் நிறுத்துமிடம் குறித்து நேரில் பார்வையிடப் பட்டதுடன் பணிகளை விரைந்து முடித்திட தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் ஏனாதிமங்கலம் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே மறுகட்டுமானம் செய்யப்பட்டுள்ள எல்லீஸ் அணைக்கட்டினை திறந்துவைப்பதையொட்டி, திறப்பு விழா முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது என வனத்துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்தார்.

# பெண்கள் பாலின வன்முறைக்கு எதிராக பிரச்சாரம்





**புதுக்கோட்டை, நவ. 26–**

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஒன்றியம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் பெண்கள் பாலின வன்முறைக்கு எதிராக பிரச்சாரம் கறம்பக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் தமிழ் செல்வன் முன்னிலையில் ஒன்றிய குழுதலைவர் மாலா ராஜேந்திரதுரை தலைமையில் நடந்தது. இதில் வட்டார இயக்க மேலாளர் பவுல்தாஸ் அனைவரையும் வரவேற்றார். மேலும் இதில் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் சந்திரிகா, துர்க்கையம்மாள், மெர்லின், சுபா, சித்ரா, சகாயராணி மற்றும் சமுதாய வள பயிற்றுநர்கள், காலை உணவு திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கு வட்டார ஒருங்கிணைப்பாளர் கலைமதி நன்றி கூறினார்.

# வானவில் மையம் திறப்பு விழா



**திருவெண்ணெய்நல்லூர், நவ. 26–**

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய் நல்லூர் ஒன்றியம், மழையம்பட்டு ஊராட்சிக்குட்பட்ட தக்காவில் அரசூர் –திருவெண்ணெய்நல்லூர் சாலையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமைகளை தடுப்பதற்கும் பாதிக்கப்பட்டவர் களுக்கான தீர்வு மையமாகவும் பெண்களை அடித்தல், மிரட்டுதல், குழந்தைகளை பயமுறுத்துதல், அநாகரிக மாக பேசுதல், பெண்கள் பின் செல்லுதல், அவமதித்தல், துஷ்பிரயோகம் செய்தல், அவமானப்படுத்துதல் மற்றும் மனரீதியாக துன்புறுத்துதல் உள்ளிட்ட பல்வேறு விதமான உதவிகளை செய்யவும் தீர்வு காணும் வகையிலான பாலின வள மையம், வானவில் மையம் திறப்பு விழா நடைபெற்றது. ஒன்றிய கவுன்சிலர் தனக்கோட்டி ஸ்ரீதர் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி குத்துவிளக்கேற்றி விழாவினை தொடங்கி வைத்தார். விழாவிற்கு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பாலசுப்பிரமணியன், ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் உதவி திட்ட அலுவலர் வீரசேகரன், கண்காணிப்பாளர் (மகளிர் திட்டம்) பாபு, வட்டார இயக்க மேலாளர் கவிதா ஆகியோர்கள் கலந்து கொண்டு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்கொடுமை, பாதிக்கப் பட்டவர்களுக்கு தீர்வு காணுவதற்கான வழிகளையும், விளக்கங்களையும் சட்டரீ தியான உதவிகளையும், அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் வழங்கினார்கள். இதில் வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் அலுவலர்கள், மகளிர் குழுவினர்கள் மற்றும் பெண்கள் பலர் கலந்து கொண்டனர்.

**தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்**

# வாய்க்கால் ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி விழுப்புரம் நகராட்சி திடலில் ஆர்ப்பாட்டம்

**விழுப்புரம், நவ. 26–**

விழுப்புரத்தில் வாய்க்கால் ஆக்கிரமிப்புகளை அகற்ற வலியுறுத்தி பொது நல அமைப்பினர் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

விழுப்புரம் மாவட்ட அனைத்து விவசாயிகள் சங்கம், சமூக ஆர்வலர்கள் கூட்டமைப்பு, நீர்நிலைப் பாதுகாப்பு இயக்கம் சார்பில் விழுப்புரம் நகராட்சி திடலில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஒருங்கிணைப்பாளர் அகிலன் தலைமை தாங்கினார்.




விவசாய சங்க மாவட்ட தலைவர் கலிவரதன் கண்டன உரையாற்றினார். விழுப்புரம் நகரம் வழியாக செல்லும் விழுப்புத்தான் வாய்க்காலை முழுமையாக அளந்து, அதன் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும், தென்பெண்ணை ஆற்றில் இருந்து, அதில் நிரந்தரமாக தண்ணீர் வருவதற்கு வழிவகை செய்ய வேண்டும். அந்த வாய்க்கால் நிலத்தை நத்தமாக மாற்றி பட்டா வழங்கிய அதிகாரிகளை பணி நீக்கம் செய்ய வேண்டும்.

நகரில் வாய்க்கால் தொடரும் வாய்க்கால் ஆக்கிரமிப்பாளர்களை அகற்ற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

# கிராம நிர்வாக உதவியாளர் சங்கம் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

**உளுந்தூர்பேட்டை, நவ. 26–**

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு அரசு கிராம நிர்வாக உதவியாளர் சங்கம் சார்பில் மாபெரும் கவன ஈர்ப்பு முதற்கட்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற வட்டச்செயலாளர் ராமலிங்கம் தலைமையில் மற்றும் மாவட்ட அமைப்புச் செயலாளர் பிரபு, மாவட்ட செயலாளர் பார்த்தசாரதி, மாவட்ட மகளிர் அணி தலைவி வள்ளி, மாவட்ட




மகளிர் அணி துணைச் செயலாளர் சுபாஷினி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநிலச் செயலாளர் சக்கரவர்த்தி, மாநிலத் துணைச் செயலாளர் முகமது காசிம் ஆகியோர் நான்கு வகையான கோரிக்கைகளை நிறைவேற்ற கோரி மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் நிர்வாகிகள் செந்தில்குமார், அருண் ராஜ், மருதமுத்து, ராமராஜ், காமராஜ், ஏழுமலை, வினோத்குமார், வெங்கடேசன், ராஜேந்திரன், கோவிந்தராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# விளையாட்டு உபகரணங்களை பெற்றுள்ள இளைஞர்கள் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு




கடலூர், நவ. 26-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கடலூர் மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பொன்விழாவினை சிறப்பிக்கும் வகையில் நடைபெற்ற கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு வழங்கும் விழாவில், கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 683 ஊராட்சிகளுக்கு, 33 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 835 தொகுப்புகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் பேசியதாவது, முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு சார்பாக, கடலூர் மாவட்டத்தில் இன்று இந்த அரசு நிகழ்ச்சியின் மூலம் 12 ஆயிரம் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த 3 நாட்களாக ஏராளமான நிகழ்ச்சிகள்.. திருச்சி மாவட்டத்தில் ஆரம்பித்து துறையூரில் தொடங்கி, நாகை, சீர்காழி போன்ற இடங்களில் நடைபெற்ற அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் எல்லாம் பங்கேற்றுவிட்டு இன்றைக்கு கடலூருக்கு வந்து சேர்ந்திருக்கின்றேன்.

கடலூருக்கு பல முறை வந்திருக்கின்றேன். அண்ணன் எம்.ஆர்.கே அமைச்சர் சொன்னது போல, பலமுறை வந்திருக்கின்றேன். பிரச்சாரம், கழக நிகழ்ச்சி, அரசு நிகழ்ச்சி சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கின்றேன். விளையாட்டுத் துறை அமைச்சராக வந்திருக்கின்றேன். ஆனால், முதல் முறையாக துணை முதலமைச்சராக பொறுப்பேற்று உங்களை எல்லாம் சந்தித்து, உங்களுடைய வாழ்த்துகளை பெறுவதற்கு நான் இங்கு வந்திருக்கின்றேன். திராவிட மாடல் என்று சொன்னாலே எல்லாருக்கும் எல்லாம் என்று தான் அர்த்தம். அதன் அடிப்படையில் இந்த நிகழ்ச்சிக்கூட ஒரு திராவிட மாடல் நிகழ்ச்சி என்று சொல்லலாம். ஏனென்றால், இங்கே எல்லாருக்கும் எல்லாம் அனைத்து திட்டங்களும் கொடுக்கப்படுகிறது. கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டம் மூலம், கடலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் 33 வகையான ஸ்போர்ட்ஸ் கிட் உபகரணங்கள் கொடுக்கப்படுகிறது.

மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 10 ஆயிரம் சகோதரிகளுக்கு 72 கோடி ரூபாய் மதிப்பில் வங்கி கடன் இணைப்புகள், ஆயிரத்துக்கு அதிகமானவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா, விவசாயிகள், தொழில் முனைவோர்கள், மாற்றுத்திறனாளிகள், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தோர் என அனைத்து தரப்பு மக்களுக்கும் அரசு நலத்திட்ட உதவிகள் கொண்டு போய் சேர்க்கப்படுகிறது.

இங்கே நலத்திட்டங்களை பெறுகிற அத்தனைப் பேருக்கும் முதலில் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் விளையாட்டுத்துறையில் திறமையாளர்களை உருவாக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தான் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட்ஸ் என்ற திட்டத்தை சென்ற வருடம் ஆரம்பித்தோம். இதுவரைக்கும் சுமார் 30 மாவட்டங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்டத்தில் இருந்து ஏராளமான விளையாட்டு வீரர்கள், வீராங்கனையர் உருவாக்கியிருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சிக்கு கூட, இந்த மேடையில் சர்வதேச அளவிலான கால்பந்து போட்டிகளில், இந்தியா சார்பாக பல்வேறு சாதனைகளை படைத்து வருகிற தங்கைகள் சந்தியா மற்றும் கார்த்திகா ஆகியோர் வருகை தந்திருக்கிறார்கள். அவர்கள் இரண்டு பேருக்கும் நம்முடைய அனைவரின் சார்பாக, நம்முடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வோம்.

கலைஞர் பெயரில் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் செயல்படுத்தப்படுகிற முதல் திட்டம், இந்தத் திட்டத்திற்கு முதன்முறையாக கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் திட்டம் தான் என்று பெயர் வைத்தோம். நீங்கள் கூட யோசிக்கலாம். எதற்கு ஒரு ஸ்போர்ட்ஸ் திட்டத்திற்கு கலைஞருடைய பெயர் வைக்கிறோம். ஏனென்றால், கலைஞரிடம் இருந்த அந்த விடாமுயற்சி, திட்டமிடல், மன உறுதி உள்ளிட்ட அத்தனை குணங்களும் ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் இருக்க வேண்டும் என்று தான் கலைஞர் பெயரை வைத்தோம்.

இங்கே நிறைய மகளிர் வந்திருக்கிறீர்கள். கடலூர் மகளிரை பொறுத்தவரை உழைப்புக்கு பேர் போனவர்கள். அப்படிப்பட்ட உங்களுக்கு நம்முடைய திராவிட மாடல் அரசு சார்பாக, ரூ.71 கோடி அளவுக்கு வங்கி கடன் இணைப்பையும் இங்கே வழங்க இருக்கின்றோம். இதனை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுக்கக்கூடிய வெறும் கடன் தொகையாக பார்க்கவில்லை. உங்கள் உழைப்பின் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கை தொகையாக முதலமைச்சர் பார்க்கின்றார்கள். இந்த கடன் இணைப்பின் மூலம், சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் நீங்கள் வாழ்வில் இன்னும் பல உயரங்களை தொட எங்களுடைய அன்பையும், வாழ்த்தையும் நாங்கள் தெரிவித்துக் கொள்கிறோம். அதே போல, இங்கே 1,000 பேருக்கு வீட்டுமனை பட்டா வழங்க இருக்கின்றோம். வீடு எவ்வளவு முக்கியமோ, அதைவிட முக்கியம் வீட்டு மனை பட்டா. உங்கள் இடத்துக்கான பட்டா என்பது, உங்களுடைய சட்டப்பூர்வ உரிமை. அந்த உரிமையை நிலைநாட்டுகின்ற விதமாக, உங்களுக்கு இன்று இந்த நிகழ்ச்சியில் பட்டா வழங்க இருக்கின்றோம். அதற்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு குடும்பத்துக்கும் தேவையான திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் பார்த்து, பார்த்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக, இந்தியாவே திரும்பி பார்க்கின்ற வகையில், கலைஞர் மகளிர் உரிமை திட்டத்தை முதன்முதலில் நம்முடைய தமிழ்நாட்டில் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் திட்டத்தை அறிவித்தார்கள். அதை சென்ற வருடம் செயல்படுத்தினார்கள். ஒவ்வொரு மாதமும் தமிழ்நாடு முழுக்க ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் மாதம் 1,000 ரூபாய் கலைஞர் மகளிர் திட்டம் மூலம் பயனடைகிறார்கள். இந்த கடலூர் மாவட்டத்தில் மட்டும் ஐந்து இலட்சம் மகளிர் இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெற்று வந்து கொண்டிருக்கிறார்கள். அதுபோல, கடலூர் மாவட்டத்தில் விடியல் பயணம் திட்டம் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டத்தின் கீழ் இதுவரைக்கும் 17 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறீர்கள். ஒரு, ஒரு மகளிரும் இந்த விடியல் பயணத் திட்டத்தின் மூலம் மாதம் ரூபாய் 900லிருந்து 1,000 ரூபாய் வரைக்கும் சேமிக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், பெண்கள் படிப்பதற்கு புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன் திட்டங்கள் மூலம் 21 ஆயிரம் மாணவ, மாணவியர் கடலூர் மாவட்டத்தில் மட்டும் மாதம் 1,000 ரூபாய் கல்வி உதவித்தொகை பெற்று வருகின்றார்கள். கடலூர் மாவட்டத்தில் மட்டும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தமிழகம் முழுவதும் 20 லட்சம் குழந்தைகள் இதில் பயன் பெறுகிறார்கள். இந்த கடலூர் மாவட்டத்தில் மட்டும் சுமார் 58 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் தினமும் பயனடைந்து வருகின்றார்கள். இந்த திட்டங்கள் எல்லாம் உங்களுடைய வாழ்வை மேலும் மேலும் ஒளிமயமாக்காட்டும். கடலூர் மாவட்டத்தில் விளையாட்டு மேம்பாட்டிற்காகவும், விளையாட்டு கட்டமைப்புக்காகவும் ஏராளமான நடவடிக்கைகளை நம்முடைய திராவிட மாடல் அரசு எடுத்து வருகின்றது. இங்கே இருக்கிற பேரறிஞர் அண்ணா ஸ்டேடியத்தை மேம்படுத்த ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் அளவில் பணிகள் செய்து முடிக்கப் பட்டுள்ளன. விருத்தாச்சலத்தில் உள்ள மினி ஸ்டேடியத்தில் கேலரியை மேம்படுத்துவது பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை 18 லட்சம் ரூபாய் அளவில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ரூபாய் 18 லட்சம் செலவில் SDAT விளையாட்டு விடுதி மேம்படுத்தப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் உங்களுடைய வேண்டுகோளை ஏற்று ஒரு முக்கியமான அறிவிப்பை இங்கே வெளியிட இருக்கின்றேன். பேரறிஞர் அண்ணா அவர்களால் 1968 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப் பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1975 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா ஸ்டேடியம் விரைவில் பொன்விழா காண உள்ளது. பல சர்வதேச தேசிய அளவிலான வீரர்களை உருவாக்கிய அண்ணா ஸ்டேடியத்தில் ரூ.15 கோடி மதிப்பீட்டில் செயற்கை இழை ஓடுதளம் -Artificial Fibre Synthetic Track அமைக்கப்படும் என்ற அறிவிப்பை முதலமைச்சர் உத்தரவின் பேரில், அவருடைய அனுமதியோடு, அவருடைய வழிகாட்டுதலின்படி உங்களுடைய கோரிக்கையை ஏற்று இங்கே அறிவிக்கின்றேன். அதில் மகிழ்ச்சி அடைகின்றேன். நீங்களும் மகிழ்ச்சி அடைவீர்கள் என்று நம்புகிறேன்.

இங்கே விளையாட்டு உபகரணங்களை பெற்றுள்ள இளைஞர்கள், அதனை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று மீண்டும் நான் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கின்றேன். விவசாயிகள், மாற்றுத்திறனாளிகள், தொழில்முனைவோர் என இங்கே அனைத்து நலத்திட்ட உதவிகளை பெற்றுள்ள அத்தனை பயனாளிகளுக்கும் மீண்டும் என்னுடைய அன்பையும், வாழ்த்தையும் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். இவ்வாறு பேசினார்.

பின்னர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் 683 ஊராட்சிகளுக்கும், 33 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 835 தொகுப்புகளை கொண்டு செல்லும் வாகனத்தை கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர் செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.விஷ்ணு பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் ஐயப்பன், ராஜேந்திரன், ராதாகிருஷ்ணன், சிந்தனை செல்வன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, மேயர் சுந்தரிராஜா, மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில் குமார், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, துணை மேயர் தாமரைச்செல்வன், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## முட்டத்தூர் கிராம வாசகசாலை தெருவில் சாலை அமைக்க பொதுமக்கள் கோரிக்கை



விழுப்புரம், நவ. 26-

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தாலுக்கா முட்டத்தூர் கிராமத்தில் வாசகசாலை தெருவில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

20 வருடத்துக்கு மேலாக சாலை பராமரிப்பு செய்யாததால் பள்ளி செல்லும் குழந்தைகளும் பொதுமக்கள் சேரும் சகதியுமாக உள்ள வழியை தினந்தோறும் பயன்படுத்துவதால் கொசுக்கடி மற்றும் காய்ச்சல் உடல் நலக்குறைவு நோய்களுக்கு ஆளாவதால் கிராம மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

ஊராட்சி தலைவரிடமும் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் பல்வேறு முறை அணுக்கள் அளித்தும் சாலை அமைத்து தர சொல்லி கோரிக்கை வைத்தும் கண்டுகொள்ளாமல் கிடப்பில் போடப்படுகிறது. ஆகையால் சாலையில் உள்ள சேற்றில் நாத்து நட்டு தங்களுக்கு சாலை மற்றும் சைட்டு கால்வாய் அமைத்து கொசு மற்றும் அதனால் வரக்கூடிய நோய்களிலிருந்து காப்பாற்றுமாறு மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை வைக்கின்றனர்.

---

## தாராபுரம் பகுதியில் மாநகராட்சி ஆணையர் ஆய்வு



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் ராமமூர்த்தி தாராபுரம் பகுதியில் உள்ள தண்ணீர் தொட்டி அலுவலகத்தில் 24/7 திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு குடிநீர் வழங்குவது குறித்து பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் தலைமை பொறியாளர்(பொ) செல்வநாயகம்.

---

# சிறுதானியம் பதப்படுத்தும் மையத்தின் செயல்பாடு குறித்து ஆட்சியர் ஆய்வு



மதுரை, நவ. 26-

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டாரம் சின்ன வாகைக்குளத்தை சேர்ந்த திருமங்கலம் உழவர் உற்பத்தியாளர் குழுவினால் செயல்படுத்தப்பட்டு வரும் சிறுதானிய பதப்படுத்தும் மையத்தின் செயல்பாடு குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழு உறுப்பினர்களுடன் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் சங்கீதா தெரிவித்ததாவது: தமிழ்நாடு அரசு சிறுதானியங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் விவசாயிகளிடம் சிறுதானியம் பயிரிடுவதில் ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டை கொண்டாடும் இந்த நேரத்தில் பொதுமக்களிடமும் சிறுதானியங்கள் மீது ஆர்வம் ஏற்பட்டு சிறுதானிய உணவினை சாப்பிடும் பழக்கம் அதிகரித்துள்ளது. மதுரை மாவட்டத்தில் உசிலம்பட்டி மற்றும் திருமங்கலம் வட்டாரத்தில் அதிகளவில் சிறுதானியங்கள் பயிரிடப்படுகிறது. சிறுதானியங்கள் பயிரிடும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையிலும், விளைவிக்கின்ற சிறுதானியங்களை சந்தையில் மதிப்புக்கூட்டி விற்பனை செய்யும் வகையிலும் தமிழக அரசு பல்வேறு மானியங்களை வழங்கி வருகிறது.

அந்த வகையில், மதுரை மாவட்டத்தில் சிறுதானியங்கள் முதன்மை பதப்படுத்தும் இயந்திரங்களை அரசின் மானியத்தில் வாங்குவதற்கு விவசாயிகள் விண்ணப்பித்து இருந்தனர். இதில் கடந்த ஆண்டு 3 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு இருந்தனர். இந்தாண்டு விண்ணப்பித்தவர்களில் ஒருவர் தேர்வு செய்யப்பட்டு தற்போது சிறுதானியங்களை முதன்மைபதபடுத்தும் இயந்திரங்களை செயல்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளனர். ரூபாய் 25 லட்சம் மதிப்புடைய இயந்திரத்திற்கு அரசு மானியமாக 75 சதவீதம் சுமார் ரூ.18.75 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது. சிறுதானியங்களை முதன்மைப்படுத்தும் இயந்திரம் சிறுதானியங்களில் உள்ள கல், மண் ஆகியவற்றை நீக்கி சுத்தப்படுத்துவதுடன் பிற தானியங்கள் கலந்து விடாதபடி பிரித்து தனிதனியாக வழங்குகிறது. நல்ல தானியங்களை மட்டுமே பிரித்து வழங்குவதால் சிறுதானியங்களை தரமானதாக சந்தைகளுக்கு அனுப்ப முடிகிறது. இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் இலாபம் கிடைக்கிறது. தமிழ்நாட்டில் முதன்முறையாக மதுரை மாவட்டத்தில் சிறுதானியங்களை முதன்மைப்படுத்தும் இயந்திரம் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு விவசாயிகளுக்கு அரசின் மானியம் வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் திருமங்கலம் வட்டாரம் சின்ன வாகைக் குளத்தை சேர்ந்த திருமங்கலம் உழவர் உற்பத்தியாளர் குழுவினால் செயல்படுத்தப்பட்டு வரும் சிறுதானிய பதப்படுத்தும் மையத்தினையும், மையத்தில் செயல்பட்டுவரும் இயந்திரங்களை பற்றியும், திருமங்கலம் உழவர் உற்பத்தியாளர் குழுவின் செயல்பாடுகள் பற்றியும் ஆய்வு செய்யப்பட்டது. தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தில் பயன்பெற உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், கிராமப்புற இளைஞர்கள், வேளாண் தொழில்முனைவோர்கள் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

மேலும், இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர்கள், திட்ட மதிப்பீட்டில் பயனாளிகளின் பங்களிப்பு குறைந்தபட்சம் 10 சதவீதம் மற்றும் வங்கி கடனை பெறவும் விருப்பம்முடையவராக இருத்தல் வேண்டும்.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையால் மதுரை மாவட்டத்தில் மொத்தம் 7 உழவர்சந்தைகள் செயல்பட்டு வருகிறது. இதில் நாளொன்றிக்கு 350 விவசாயிகள் தங்கள் காய்கறி மற்றும் பழங்களை நேரடியாக நுகர்வோர்களுக்கு விற்பனை செய்து பயனடைகின்றனர். மேலும், TNIAMP மற்றும் TNSFAC திட்டத்தின் கீழ் 15 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு 11,078 விவசாயிகள் பங்குதாரர்களாக உள்ளன. விவசாயிகள் உற்பத்தி செய்யும் வேளாண் விளைப்பொருட்களை மூலப் பொருட்களாக பயன்படுத்தும் பெரிய நிறுவனங்களுக்கு ஒட்டுமொத்தமாக விற்பனை செய்வதால் நிகர இலாபம் கூடுதலாக கிடைக்கும். மேலும் 7 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் Digital முறையில் Flipkart மூலம் வணிகம் மேற்கொள்ள பதிவுசெய்யப் பட்டுள்ளது.

தமிழ்நாடு நீர்ப்பாசன வேளாண் நவீனமயமாக்கல் (TNIAMP) திட்டத்தின் கீழ் புதிய மற்றும் ஏற்கனவே தொழிலில் ஈடுபட்டுள்ள வேளாண் தொழில் முனைவோரர்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கிகடன் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் (KAVIADP) திட்டத்தின் கீழ் கிராமங்களில் அறுவடைக்கு பின் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தரம்பிரிப்புக் கூடாரத்துடன் கூடிய உலர்களம் கட்டப்பட்டு விவசாயிகள் பயனடைந்து வருகின்றன.

வேளாண் ஏற்றுமதி திட்டத்தின் கீழ், மா, தென்னை, சிறுதானியங்கள், முருங்கை, மஞ்சள், சின்னவெங்காயம் மற்றும் வெள்ளரி ஆகியவற்றை பயிரிடும் அப்பீடா பயற்சி பெற்ற விவசாயிகளை தேர்வு செய்து அவர்களை ஏற்றுமதியாளராக மாற்ற உரிய சான்றிதழ்களை பெற்றுத்தரும் பொருட்டு ரூ.15,000 அரசு மானியமாக வழங்கப்படுகிறது. அக்மார்க் ஆய்வகங்கள் (AGMARK) மூலம் மத்திய அரசின் வேளாண்மைத்துறையின் கீழ் இயங்கும் வேளாண் விற்பனையாக்கம் மற்றும் ஆய்வு இயக்குநரகமும், மாநில அரசின் வேளாண் விற்பனை மற்றும வணிகத்தின் கீழ் இயங்கும் மாநில அக்மார்க் தரம்பிரிப்பு ஆய்வகமும் இணைந்து வேளாண் விளைப்பொருட்களின் தரம் மற்றும் சுத்தத்திற்கு தரச்சான்றிதழ் வழங்கப்படுகிறது. எனவே, மதுரை மாவட்ட விவசாயிகள் அரசின் மானியத்தில் வழங்கப்பட்டு வரும் சிறுதானியங்கள் முதன்மை பதப்படுத்தும் இயந்திரங்களை பெறுவதற்கு விண்ணப்பித்து பயனடையலாம் என்று தெரிவித்தார். இந்த ஆய்வின்போது, மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுவின் உறுப்பினர்களான வேளாண்மை இணை இயக்குநர் சுப்புராஜா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராணி அவர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொன்டனர்.

# ரேஷன் கடைகள் மூலம் அத்தியாவசிய பொருட்கள் உடனடியாக வழங்க வேண்டும்

## இந்திய கம்யூனிஸ்ட் தீர்மானம்



**புதுச்சேரி, நவ. 26–**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தட்டாஞ்சாவடி தொகுதிக் குழு மற்றும் கிளை செயலாளர்கள் கூட்டம் பாக்கமுடையான்பட்டு காரல் மார்க்ஸ் படிப்பகத்தில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் முருகன் தலைமை வகித்தார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில துணை செயலாளர் சேதுசெல்வம் மாநிலக்குழு முடிவுகள், எதிர்கால வேலைகள் சம்பந்தமாக பேசினார்.

தொகுதி செயலாளர் தென்னரசன், மாநில குழு உறுப்பினர்கள் எழிலன், செல்வம் ஆகியோர் பேசினர். தொகுதி பொருளாளர் தனஞ் செழியன், தொகுதி குழு உறுப்பினர்கள் லோகு, ரவிச்சந்திரன், தியாகு, முருகன், ஆரமுது, வெங்கடேசன், கிளைச் செயலாளர்கள் சண்முகம், மாரிமுத்து, சிவகுமார், பிரதீபன், கார்த்திகேயன், செந்தில் ஆகியோர் கலந்துகொண்டனர்.

டிச. 26ல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு தொடக்க விழா தட்டாஞ்சாவடி தொகுதிக் குழு சார்பில் சிறப்பான முறையில் கொண்டாடுவது.

கடந்த தீபாவளிக்கு ரூ.1000 மதிப்புள்ள பத்து வகையான பொருட்கள் கான்பெட் மூலமாக மானிய விலையில் ரூ.500க்கு வழங்கப்படும் என முதலமைச்சர் அறிவித்திருந்தார். தீபாவளி பண்டிகை முடிந்து ஒரு மாதம் ஆகப்போகிறது, இதுவரை தீபாவளிக்கு வழங்குவதாக சொன்ன 10 வகையான மளிகை தொகுப்புகள் இதுவரை வழங்கப்படவில்லை. எனவே, இனியும் காலம் கடத்தாமல் உடனடியாக அறிவித்த பொருட்களை வழங்க வேண்டும்.

தட்டாஞ்சாவடி தொகுதிக்குட்பட்ட புதுப்பேட்டை, சுப்பையா நகர், வேலன் நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தின் மூலம் வீடுகளுக்கு கழிவுநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த கழிவுநீர் இணைப்பு மூலமாக பாதாள சாக்கடையில் இருந்து வீடுகளுக்குள் கழிவுநீர் வருகிறது. இதனால், பல்வேறு தொற்றுகள் பரவக்கூடிய அபாயம் இருந்து வருகிறது. இதனை போர்க்கால அடிப்படையில் உடனடியாக சரி செய்திட வேண்டும்.

புதுச்சேரியில் உள்ள அனைத்து ரேஷன் கடைகளையும் 2024 அக்டோபர் 21ம் தேதி ரேஷன் கடைகளை திறந்து அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படும் என அறிவித்தார். அறிவித்து ஒரு மாதம் கடந்த நிலையிலும் இதுவரை ரேஷன் கடைகள் திறக்கப்படவில்லை. எனவே, முதலமைச்சர் புதுச்சேரி மக்களை ஏமாற்றாமல் உடனடியாக ரேஷன் கடைகளை திறந்து அனைத்து அத்தியாவசிய பொருட்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என, வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# பி.எஸ்சி., நர்சிங், பி.பார்ம்., படிப்பிற்கு சிறப்பு கவுன்சிலிங் நாளைக்குள் விருப்பத்தை அளிக்க சென்டாக் அறிவுறுத்தல்

**புதுச்சேரி, நவ. 26–**

பி.எஸ்சி., நர்சிங், பி. பார்ம்., படிப்பிற்கு சிறப்பு கவுன்சிலிங் நடத்த திட்டமிட்டுள்ள சென்டாக் நாளைக்குள் விருப்பத்தை அளிக்க அறிவுறுத்தி உள்ளது.

பி.எஸ்சி., நர்சிங், பி. பார்ம்., படிப்புகளுக்கான கவுன்சிலிங் காலக்கெடு வரும் 30ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதால் இப்படிப்புகளுக்கு சிறப்பு கவுன்சிலிங் நடத்த சென்டாக் முடிவு செய்துள்ளது. சிறப்பு கவுன்சிலிங்கில் பங்கேற்க விரும்பும் மாணவர்கள் தங்களுடைய நீட் மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை இல்லாத டேஷ்போர்ட்டில் நுழைந்து வரும் நாளை 27ம் தேதி மதியம் 2 மணிக்குள் விருப்பம் தெரிவிக்க வேண்டும். இந்த கவுன்சிலிங்கில் பங்கேற்க விரும்பும் பி.எஸ்சி., நர்சிங் படிப்பில் ஏற்கனவே சீட்டு எடுத்து சேர்ந்திருக்கக் கூடாது என அறிவுறுத்தப் பட்டுள்ளது. இதேபோல் முதுநிலை எம்.டி., எம்.எஸ்., படிப்பிற்கு விண்ணப்பித்த மாணவர் களுக்கு முதற் கட்ட கலந்தாய்வு நடத்தி, வரைவு முறையில் இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஆட்சேபனை இருந்தால் இன்று 26ம் தேதி மதியம் 2 மணிக்குள் தெரிவிக்கலாம். சேர்க்கை கடிதத்தை நாளை 27ம் தேதி முதல் டவுன்லோட் செய்து கல்லூரியில் சேரலாம். அடுத்த மாதம் 4ம் தேதிக்குள் சீட்டு கிடைத்த கல்லூரியில் சேர வேண்டும். இவ்வாறு சென்டாக் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# முதுகலை மாணவிகளுக்கு பட்டமளிப்பு விழா




**கோவை, நவ. 26–**

கோவை பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியில் 2020–21ம் ஆண்டிற்கான இளங்கலை மற்றும் முதுகலை மாணவிகளுக்கான பட்டமளிப்பு விழா, கல்லூரி வளாக அரங்கில் நடைபெற்றது. கல்லூரியின் தலைவர் டாக்டர் நந்தினி ரங்கசாமி தலைமையில் நடைபெற்ற, விழாவில் சிறப்பு விருந்தினராக, தமிழ்நாடு உணவு பதப்படுத்துதல் மற்றும் வேளாண் ஏற்றுமதி மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி, டாக்டர் அழகுசுந்தரம் கலந்து கொண்டு தலைமையுரையாற்றினார். அப்போது பேசிய அவர், நவீன தொழில் நுட்பங்களை மாணவிகள் ஆர்வமுடன் கற்றுகொள்ள வேண்டும் என்று கூறிய அவர், பட்டப்படிப்புகளை முடித்து செல்லும் மாணவிகள் தங்களது லட்சியத்தை அடைய கடுமையாக உழைக்க வேண்டும் என கூறினார்.

தொடர்ந்து 2020 –21ம் ஆண்டிற்கான இளங்கலை மற்றும் முதுகலை படிப்பில் ரேங்க் பெற்ற 48 மாணவிகள் மற்றும் 2732 பேருக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கினார். புதிய பட்டதாரிகளுக்கு கல்லூரி முதல்வர் டாக்டர். பி. பி. ஆரதி உறுதிமொழி ஏற்புரை வாசித்தார்.

நிகழ்வின் இறுதியில், கல்லூரிச் செயலர் டாக்டர். என். யசோதா தேவி நன்றியுரை வழங்கினார். பட்டமளிப்பு விழாவில் கல்லூரியின் துறை தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவிகள் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# இந்திய அரசியலமைப்பு நாள் கடைபிடிப்பு



இந்திய அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டதை நினைவு கூரும் வகையில் ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 26ஆம் நாள் இந்திய அரசியலமைப்பு நாளாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்திய அரசியலமைப்பு நாளையொட்டி இன்று புதுச்சேரி சட்டப்பேரவையில் முதலமைச்சர் அலுவலகத்தில் முதலமைச்சர் ரங்கசாமி முன்னிலையில் பொதுப்பணி மற்றும் சட்ட அமைச்சர் லட்சுமிநாராயணன், இந்திய அரசியலமைப்பு முகவுரையை வாசிக்க ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் பிஆர்என் திருமுருகன், சட்டச் செயலர் டாக்டர் சத்தியமூர்த்தி மற்றும் வழக்கறிஞர்கள், சட்ட மாணவ மாணவியர்கள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

# சாதனையாளர்களுக்கு முத்தமிழ் விருது வழங்கும் விழா





**சேலம், நவ. 26–**

சேலம் மாவட்ட முத்தமிழ்ச் சங்கத்தின் சார்பில், தமிழ் நாடு, கர்நாடகா, புதுவை மாநிலங்களைச் சேர்ந்த பல்வேறு துறைகளில் சாதனை படைத்த 50 சாதனையாளர்களுக்கு முத்தமிழ் விருது வழங்கும் விழா சேலம் 5ரோடு அருகில் உள்ள தனியார் ஹோட்டலில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஓமலூர் சட்டமன்ற தொகுதி முன்னாள் உறுப்பினர் தமிழரசு தலைமை தாங்கினார். பெரியார் பல்கலைக் கழகம் முன்னாள் துணை வேந்தர் தங்கராசு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 50 சாதனையாளர் களுக்கும் விருது, சால்வை, பதக்கம், சான்றிதழ் வழங்கி சிறப்பு செய்தார். சேலம் மாவட்ட முத்தமிழ்ச் சங்கத்தின் நிறுவனர், தலைவர் கவிஞர் பொன் சந்திரன் அறிமுக உரையாற்றினார். செயலாளர் கோவிந்தராஜ் வரவேற்றார். ஓடெக்ஸ் இளங்கோவன், அசோகன், பொன்னுசாமி, கௌசல்யா பங்கயம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியின் முடிவில் பொருளாளர் கவிஞர் ரவி அனைவருக்கும் நன்றி கூறினார்.

# உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு கோலப் போட்டி பரிசளிப்பு விழா

**மதுரை, நவ. 26–**





திமுக இளைஞரணி செயலாளர் தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் மதுரை தெற்கு மாவட்ட அமைப்பாளர் விமல் ஏற்பாட்டில் மாபெரும் கோலப் போட்டி நடைபெற்றது. இந்தபோட்டியில் ஏராளமான பெண்கள் பங்கேற்றனர். முதல் பரிசு 1/2 பவுன் தங்கத்தோடு, இரண்டாம் பரிசு 1/4 பவுன் தங்கத்தோடு, மூன்றாம் பரிசு கிரைண்டர் கேஸ் அடுப்பு, நான்காம் பரிசு மிக்ஸி உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டது. மேலும் சிறந்த கோலங்களுக்கு 300க்கும் மேற்பட்டோர்க்கு எல் .இ.டி டிவி மிக்ஸி கிரைண்டர் போன்ற சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டது. போட்டியில் கலந்து கொண்ட பெண்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை தெற்கு மாவட்ட செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் அணி மாநில துணை அமைப்பாளர் இன்பா ரகு, மதுரை தெற்கு மாவட்ட பொருளாளர் கொம்பாடி தங்கம் மதுரை மேற்கு மண்டல தலைவர் சுவிதாவிமல் மற்றும் திருப்பரங்குன்றம் திமுக பகுதி செயலாளர் மாமன்ற உறுப்பினர் உசிலை சிவா மற்றும் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

# மொரப்பூரில் பாலின பாகுபாடு விழிப்புணர்வு பிரச்சார பேரணி



**தருமபுரி, நவ. 26–**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் பாலின பாகுபாடு பிரச்சார விழிப்புணர்வு பேரணி மொரப்பூரில் நடைபெற்றது. இப் பேரணிக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட அலுவலர் லலிதா தலைமை வகித்தார். உதவி திட்ட அலுவலர் மகளிர் திட்டம் முத்துப்பாண்டி, முருகேசன், மொரப்பூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்து அலுவலர் டாக்டர்.எஸ்.வனிதா, மொரப்பூர் வட்டார இயக்க மேலாளர் விஜயலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். வட்டார ஒருங்கிணைப்பாளர் மணிவேல் வரவேற்று பேசினார். மொரப்பூர் ஒன்றிய குழு தலைவர் இ.டி.டி.சுமதி செங்கண்ணன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்து வாழ்த்தி பேசினார். இப்பேரணி மொரப்பூர் பஸ் நிலையம், காவல் நிலையம்,க ல்லாவி ரோடு, வட்டார வளர்ச்சி அலுவலகம் வழியாக தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகம் வரை நடைபெற்றது. இப்பேரணியில் பாலினம் தொடர்பான பிரச்சனைகளை களைவது, வன்முறைக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பது, பாலின சமத்துவம், குழந்தைகள் திருமணம், குடும்ப வன்முறை, பாலின வன்முறை ஆகியவற்றால் தனி நபர் மற்றும் சமூகம் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு உரிமைகள், உளவியல் சட்டம், மருத்துவம், தங்குமிடம், மறுவாழ்வு மற்றும் பிற ஆலோசனைகள் மற்றும் ஆதரவுகள் அளித்தல், கிராமப்புற பெண்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவினருக்கு ஒருங்கிணைக்கப்பட்ட ஆதரவு சேவைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குதல் மற்றும் போதை பொருள் பயன்பாடு, மது ஒழிப்பு, குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் தடுத்தல், பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறையிலிருந்து பாதுகாத்தல், பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதத்தை அதிகரித்தல் உள்ளிட்ட கருத்துக்களை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. இப்பேரணியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் சுகுணா, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் என்.சுபாஷ் சந்திரபோஸ், பெண் காவலர்கள் ரீனா, சுஜித்ரா, வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் லட்சுமி, நித்தியா மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்க அலுவலர்கள், மக்கள் மருத்துவ பணியாளர்கள், சுய உதவி குழுக்கள் சார்ந்த பெண்கள் உள்பட பலர் திரளாக கலந்துகொண்டனர். வட்டார ஒருங்கிணைப்பாளர் சாந்தி நன்றி கூறினார்.

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜராஜன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் உலகநாதன்.

# புற்றுநோய் தினம் விழிப்புணர்வு நிகழ்ச்சி



**சேலம், நவ. 26–**

விநாயகா மிஷனின் விம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைகள் சயின்ஸ் துறையின் சார்பில் உலக கணைய புற்றுநோய் தினம் சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

உலக கணைய புற்றுநோய் தினமானது ஆண்டுதோறும் நவம்பர் மாதம் கணைய புற்றுநோய் சார்ந்த விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் நோக்கில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு விநாயகா மிஷினின் விம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் இளம் இந்தியர்கள் அமைப்பானது பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் கணேசன் வழிகாட்டுதலின்படி விழிப்புணர்வு நிகழ்ச்சியினை கல்லூரி வளாகத்தில் நடத்தியது. நிகழ்ச்சிக்கு துறையின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் முன்னிலை வகித்து வரவேற்புரை வழங்கினார். சிறப்பு அழைப்பாளராக விம்ஸ் மருத்துவமனையின் புற்றுநோயியல் பிரிவு ஆலோசகர் மருத்துவர் சதீஷ் பாபு பங்கேற்று கணைய புற்றுநோய்க்கான காரணிகள் மருத்துவ சிகிச்சை முறைகள் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

இதில் துறையை சேர்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் துறையின் இளம் இந்தியர்கள் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் விக்னேஸ்வரா செய்திருந்தார்.

# கருத்தடை சிகிச்சை முகாம் விழிப்புணர்வு ரதத்தை துவக்கி வைத்த ஆட்சியர்




வேலூர் மாவட்டத்தில் மாவட்ட குடும்பநலச் செயலகம் சார்பாக ஆண்களுக்கான இலவச புதிய, எளிய, நவீன குடும்பநல கருத்தடை சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளதை தொடர்ந்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ரதத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி ஆட்சியர் அலுவலக வளாகத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# பாதுகாப்பு விழிப்புணர்வு ஒத்திகை



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா அறிவுறுத்தலின்படி அரசு தலைமை பொது மருத்துவமனை வளாகத்தில் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் சார்பில், பாதுகாப்பு விழிப்புணர்வு ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது.

# மாவட்ட அளவிலான தொழில்நுட்ப குழு கூட்டம்



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் பாஸ்கர பாண்டியன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் திருவண்ணாமலை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சார்பாக மாவட்ட அளவிலான தொழில்நுட்ப குழு கூட்டம் நடைபெற்றது.

# ஆட்சியரிடம் தடகள வீரர்கள் வாழ்த்து



65வது மாநில அளவிலான குடியரசு தின தடகள போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்ற மாணவிகள் எஸ்.யுத்திகா வின்யா, எம்.எஸ்.சாருநேத்ரா மற்றும் 38வது மாவட்டங்களுக்கிடையேயான இளையோர் தடகள சாம்பியன்சிப் போட்டியில் வெள்ளிப்பதக்கம் வென்ற மாணவி பி.எஸ்.கோகுல்ஸ்ரீ ஆகியோர் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் பிருந்தாதேவியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007

# டெல்டா மாவட்டங்களை நோக்கி நகரும் காற்றழுத்த தாழ்வு மண்டலம்



# அமைச்சர் கே.என்.நேரு மருத்துவமனையில் அனுமதி

# சாலையோரம் தூங்கியபோது லாரி ஏறி 5 தமிழர்கள் பலி


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 26-11-2024 செவ்வாய்க்கிழமை •வெளியூர்: 27-11-2024 புதன்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்